# ஒழுக்கமுடைமை

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# ஒழுக்கமுடைமை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | ஒழுக்கம் | 1 |
| 2. | காந்தியின் கதை | 6 |
| 3. | நிர்வாணத் துறவியின் கபடம் | 8 |
| 4. | நன்னெறி ஒழுக்கங்களைக் கற்றுத்தரத் தவறிய தந்தை | 13 |
| 5. | நன்னெறி ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுத்த தந்தை | 16 |
| 6. | தான் நன்னெறியில் நிலைபெற வேண்டும் | 18 |
| 7. | நல்லொழுக்கம் ஈருலகிலும் பெருமை தரும் | 26 |

# ஒழுக்கமுடைமை

(ஜொகூர் சாஆ தர்மா மண்டபத்தில் துறவி அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு)

## ஒழுக்கம்

உயர்வும் தாழ்வும் அவரவர் ஒழுக்கத்தால் உண்டாகும். நல்லொழுக்கத்தால் உயர்வும், தீயொழுக்கத்தால் தாழ்வும் உண்டாகும். நல்லொழுக்கம் உடையவர் உலகோருக்கு இனியவர். தீயொழுக்கம் உடையவரை அனைவரும் பழித்துத் தூற்றுவார்கள். நல்லொழுக்கம் உடையவர் புகழும், இன்பமும் பெறுவார். தீயொழுக்கம் உடையவர் பழியையும் பாவத்தையும் அடைவார். கற்றோருக்கும், கல்லாதோருக்கும் ஒழுக்கம் வாழ்வில் மேன்மை தரும். கல்லாத ஒருவரும் நல்லொழுக்கம் உடையவராக இருந்தால் நல்லவர் என்று பிறரால் போற்றப்படுவார். கல்வி கற்ற ஒருவரும், தீய ஒழுக்கம் உடையவரானால், கெட்டவர் என்று பிறரால் தூற்றப்படுவார்.

பொருட்செல்வம் பெற்ற ஒருவரும், ஒழுக்கம் இல்லாவிட்டால், அனைவராலும் வெறுக்கப்பட்டு, தூற்றப்படுவார். ஏழையும் நல்ல ஒழுக்கம் உடையவரானால், எல்லோராலும் விரும்பப்பட்டு போற்றப்படுவார். ஆகவே ஒழுக்கம் எல்லோருக்கும் பொருந்தும். ஆண்களுக்கும், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும், முதியோருக்கும். இல்வாழ்க்கை வாழ்வோருக்கும், துறவு பூண்டோருக்கும் ஒழுக்கம் வாழ்வில் உயர்வையும், புகழையும் தரும். ஒழுக்கம் உயிருக்கு மேன்மை தருமாதலால் ஒழுக்கத்தை உயிருக்கும் மேம்பட்டதாகக் கருதி காக்க வேண்டுமென்கிறார் திருவள்ளுவர்.

***ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்***
***உயிரினும் ஓம்பப் படும்.***

அதாவது; எல்லோருக்கும் ஒழுக்கம் வாழ்வில் மேன்மை தரும்; நல்லொழுக்கத்தால் ஒருவருக்கு வாழ்வில் பெருமையும், புகழும் உண்டாகும். ஆகவே, வாழ்வில் உயர்வைத் தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேம்பட்டதாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும்.

பகவான் புத்தர், நல்லொழுக்கம், இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் இன்பம் தரும் என்கிறார்…

***விழித்தெழுக! கருத்தில்லாமல் இருக்க வேண்டாம். நன்னெறி ஒழுக்கத்தைக் கடைப்பிடி. நன்னெறியில் நடப்பவனுக்கு இங்கும் சுகம், அடுத்த உலகிலும் சுகம்.***

***நன்னெறி ஒழுக்கத்தில் நடப்பாயாக; தீயொழுக்கத்தில் செல்ல வேண்டாம். நன்னெறியில் நடப்பவனுக்கு இங்கும் சுகம், அடுத்த உலகிலும் சுகம்.***

ஒழுக்கம் என்பது என்ன? வாழ்வில் உயர்வைத் தரும் ஒழூக்கத்தை, ஈருலகிலும் சுகத்தைத் தரும் ஒழுக்கத்தைப் பெறுவது எப்படி?

ஒழுக்கம் என்பது, நன்னெறியில் நடத்தல் என்பதாகும். நாம் நன்னெறியில் நடக்க விரும்பினால், முதலில் நன்னெறிகள் எவை என அறிய வேண்டும். நாம் நன்னெறிகளை அறிய விரும்பினால், இறைவன் அருளால் சான்றோர் அருளிய நன்னெறி உபதேசங்களைக் கற்றறிய வேண்டும்.

சான்றோர் அருளிய நன்னெறிகளைக் கற்பதனால், நல்லவை, கெட்டவைகளை அறியலாம்; நன்மை, தீமைகளை அறியலாம்; நன்மை பயக்கக்கூடியவை எவை என்றும், தீமை பயக்கக்கூடியவை எவை என்பதையும் அறிந்து கொள்ளலாம்; நாட வேண்டியவை எவை என்றும், நாடக்கூடாதவை எவை என்றும், அறிந்து கொள்ளலாம்; செய்யத் தக்க செயல்கள் எவை என்றும், செய்யத் தகாதவை எவை என்றும் அறிந்து கொள்ளலாம்.

நாம் நல்லது கெட்டது அறிந்து; நன்மை, தீமை அறிந்து; நன்மை பயக்கக்கூடியவை எவை என்றும், கெடுதி விளைவிக்கக் கூடியவை எவை என்றும் அறிந்து; நாடக் கூடாதவற்றை நாடாமல், நாட வேண்டியவற்றை நாடி, செய்யத் தகாத செயல்களைச் செய்யாமல், செய்யத் தக்க செயல்களைச் செய்தோமென்றால், நாம் நன்னெறியில் நடக்கிறோம் என்று பொருள் படும். இதுவே ஒழுக்க முடைமையைப் பெறும் வழியாகும். ஆகவே, சான்றோர் அருளிய நன்னெறிகளைக் கற்று, அதன்படி நடப்பது ஒழுக்க முடைமையாகும். அதாவது, நன்னெறிகளைக் கற்று, அதன்படி நடப்பவர் ஒழுக்க முடையவர் ஆவார். நன்னெறியில் நடத்தல் ஒழுக்க முடைமை ஆதலால், ஒழுக்கம் உடையோரிடம், எண்ணத் தூய்மை, சொல்தூய்மை, செயல் தூய்மை ஆகியவை இருக்கும். எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் பிறருக்குத் தீங்கு செய்யாமல் நடத்தலே ஒழுக்க முடைமையாகும்.

ஒழுக்க முடைமையைப் பகவான் புத்தர் இவ்வாறு கூறியுள்ளார்:

***"ஒருவன் தன் நாவைக் காத்து, மனதை அடக்கி, உடலால் தீமையான செயல்கள் எதையும் செய்யாதிருப்பானாக. செயல்கள் புரிவதற்கு ஏற்பட்ட இந்த மூன்று வழிகளையும் பரிசுத்தமாக வைத்திருப்பவன் பெரியோர் அருளிய நன்னெறியை அடைவான்"***

மெய், வாய், மனம் ஆகிய மூன்றினாலும், பிறருக்குத் தீமை செய்யாது, இம்மூன்றிலும் அடக்க முள்ளவனே தூய்மையானவன் ஆவான். மெய், வாய், மனம் இம்மூன்றினாலும் பிறருக்குத் துன்பம் செய்யாது, இம்மூன்றிலும்

அடக்கமுள்ளவன், பெரியோர் அருளிய நன்னெறியில் நடப்பான். பெரியோர் அருளிய நன்னெறியில் நடப்பவன், ஒழுக்க முடையவனாவான்.

ஒழுக்கமுடையோர், நல்லோர் தம்மைத் தவறாகக் கொள்ளாதவாறு, ஒரு குற்றமும் இல்லாதபடி நடந்து கொள்வார்கள். கெட்டவன் என்று பிறர் இகழும்படி நடந்து கொண்டவன் பின் நல்லவன் என்று பெயர் எடுப்பது இயலாது. ஆகவே ஒழுக்க முடையோர், தம் நடத்தையில் குற்றம் உண்டா என்று, மீண்டும் மீண்டும் ஆராய்ந்து, குற்றம் கண்டால், அக்குற்றங்களை உடனே நீக்கி விடுவர். குற்றம் செய்யாமல் வாழ்வதே ஒழுக்க முடைமையாகும்.

ஒழுக்கமுடையோர், பழிக்கு அஞ்சுவர். "குற்றம் செய்தால் நல்லோர் பழித்துச் சொல்வார்களே! இகழ்ந் துரைப்பார்களே! கெட்டவன் என்று தூற்றுவார்களே! என் நட்பை விரும்ப மாட்டார்களே!" என பழிக்கு அஞ்சுவார்கள். ஒழுக்க முடையோர் பிறர் பழிக்கும் செயல்களைச் செய்யார். பிறர் பழிக்காமல் நடந்து கொள்வதே ஒழுக்க முடைமையாகும்.

ஒழுக்க முடையோர், பாவத்திற்கும், தண்டனைக்கும் அஞ்சுவர்."பாவச் செயல்கள் பின்னால் துன்பம் தருமே! பாவச் செயல்களுக்கு இவ்வுலகிலும், அடுத்த உலகிலும் தண்டனை உண்டே, அப்படியே இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டாலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகத் தண்டனையிலிருந்து தப்ப முடியாதே!" எனத் தண்டனைக்கு அஞ்சிப் பாவச் செயல்களைச் செய்யார். ஒழுக்கம் உடையோர், ஈருலகிலும் துன்பம் தரும் பாவச் செயல்களைச் செய்யார். பாவச் செயல்களை முழுமையாக விட்டு, தூய்மையான வாழ்க்கை வாழ்வதே ஒழுக்க முடைமை யாகும்.

உடலின் நோய் உடல் நலத்தைக் கெடுக்குமாதலால் தக்க மருந்து கொண்டு, அந்நோயைப் போக்க வேண்டும். ஒழுக்கமின்மை பெருமையைக் கெடுக்குமாதலால், ஒழுக்க முடையோர் தம்மிடம் சிறு குற்றம் கண்டாலும், அக்குற்றத்தைப் போக்கி, நல்லொழுக்கத்தால் தம் பெருமையைக் காத்துக் கொள்வர்.

காந்திஜியின் மேசையின் மேல் மூன்று குரங்கு பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்று வாயை மூடிக்கொண்டிருந்தது; மற்றொன்று தன் கண்களைப் பொத்திக் கொண்டிருந்தது. மூன்றாவது குரங்கு தன் காதுகளை மூடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் ஒருவர் இவை ஏன் இங்கு வைக்கப்பட்டுள்ளன? என்று காந்திஜியிடம் கேட்டார்.

"இவை மூன்றும் என் குரு" என்று பதிலளித்தார் காந்தி அடிகள். பின் "உயர்ந்த நெறிகளைக் கூறுகின்றன இந்தப் பொம்மைகள்" என்றார்.

"ஒரு பொழுதும் பொய் பேசாதே; எவரையும் பழிக்காதே; என்ற நீதியைச் சொல்லும் வகையில் முதல் குரங்கு வாயை மூடிக் கொண்டுள்ளது."

"இரண்டாவது குரங்கு தன் கண்களைப் பொத்திக் கொண்டுள்ளது. இது கண்களால் தீமையைப் பார்க்காதே என்று அறிவுறுத்துகிறது."

"மூன்றாவது குரங்கு என்ன சொல்கிறது, தெரியுமா? தன் காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கும் இக்குரங்கு தீய செயலையும், தீய சொல்லையும் கேளாதே என்கிறது. எத்துணை உயர்ந்த கோட்பாடு இது. செவியைத் தீய வழிக்குத் திருப்புவது மனிதனின் அமைதியைக் குலைக்கிறது. மேலும் உள்ளத்தை மன்னிக்க இயலாத குற்றத்திற்கு இழுத்துச் செல்கிறது."

"நான் இந்த விளையாட்டுப் பொம்மையை கலையம்சம் பொருந்தியது என்று கருதுகிறேன். இதன் புற வடிவம் மட்டும் அழகானதல்ல. மறைந்திருக்கும் தத்துவமும் மனித இனத்திற்குப் பயனளிக்கும்."

"நான் இந்தக் குரங்குகளை அறிவு பூர்வமாகவே குரு என்று கருதுகிறேன். அவற்றை நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்கிறேன். அடிக்கடி இவை எனக்குப் பாடம் கற்பிக்கின்றன." என்று காந்திஜி கூறினார்.

ஒழுக்கமுடைமை என்றால் என்ன? காந்தி அடிகள், தனக்கு அந்த குரங்கு பொம்மைகள் அடிக்கடி பாடம் கற்பிக்கின்றன என்கிறார். எவ்வகையான பாடம் அவை கற்பிக்கின்றன? குற்றங்கள் செய்யாதே என அவை உறைக்கின்றன. ஆகவே, ஒழுக்கமுடைமை என்பது, காந்தி அடிகள் கூறியது போல், குற்றங்கள் செய்யாமல் வாழ்வதேயாகும். அதாவது, நன்னெறிகளை கற்று, நல்வழியில் நடப்பது ஒழுக்கமுடையாகும்.

கல்வி அறிவும், நன்னெறி ஒழுக்கமும், பக்தியும், தன்னடக்கமும், உடைய பெரியோர் சொல்லைப் போற்றி, அவர் சொல்லும் வழியில் நடப்பவன் ஒழுக்கமுடையவனாவான்.

பொய் பேசாமலும், தீய சொல்லைச் சொல்லாமலும், வெறுக்கும் சொற்களைப் பேசாமலும், பிறர் பொருளைக் கொள்ளக் கருதாமலும், தகாத முறையில் காமத்தை நாடாமலும், நண்பர்களைப் புறங்கூறாமலும், வெறி கொடுக்கும் மது பானங்களை அருந்தாமலும் இருப்பது ஒழுக்கமுடைமையாகும்.

இளமையில் கருத்துடன் கல்வி கற்பதும், கற்றோரைப் போற்றுதலும், பெரியோருக்கு மரியாதை செய்தலும், பெரியோர் அறிவுரை கூறும் போதே தவற்றை விட்டு விடுவதும், பெரியோர் சொல் கேட்டு நல்வழியில் நடப்பதும் ஒழுக்கமுடைமையாகும்.

தீய பழக்கங்களை ஒழித்தலும், நற்பண்புகளைக் கற்பதும், கட்டுப்பாடுள்ள மனமும், உயர்ந்த குறிக்கோளும், ஊக்கமும், எடுத்த காரியத்தை முடிக்கும் மன வலிமையும் ஒழுக்கமுடைமையாகும்.

நாவைக் காத்து, மனதை அடக்கி, உடலால் தீமை ஏதும் செய்யாமல், எப்போதும் கவனமாய் இருந்து, செய்யத் தகாதவைகளை விலக்கி, செய்யத் தக்கவைகளையே செய்து வருகின்றவன், நன்னெறியில் நடப்பான். நன்னெறியில் நடப்பவன் ஒழுக்க முடையவனாவான்.

வெகுளியை விட்டவன், கடமைகளிலே கவனமுள்ளவன், ஒழுக்க விதிகளின்படி நடப்பவன், தன்னடக்க முள்ளவன், தான் ஒரு குற்றமும் செய்யாதிருந்தும் தனக்குத் தீங்கிழைத் தோருக்கும் பதிலுக்குத் தீங்கு செய்யாதவன், பெரியார் போற்றும் நன்னெறியில் நடப்பான். நன்னெறியில் நடப்பவன் ஒழுக்க முடையவனாவான்.

கல்வி அறிவும், அறமும், பக்தியும், உடைய நல்லோர் நட்பைப் போற்றி வளர்த்தலும், மரியாதைக்குரியோருக்கு மரியாதை செய்தலும், தீயோருடன் நட்புக் கொள்ளாமையும் ஒழுக்க முடைமையாகும்.

பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதலும், பதிலுக்குத் தீமை செய்யாதிருத்தலும், தமக்குத் தீமை செய்தோருக்கும் நன்மையே செய்தலும், தாம் முன்னர் அறியாது பிழைகள் செய்தாலும், அறிந்த பின் அவற்றைச் செய்யாதிருத்தலும், தம் நலனைக் காப்பதுபோல் பிறர் நலனையும் காத்து வாழ்தலும் ஒழுக்கமுடைமையாகும்.

நீதிநெறி தவறாமல் பொருள் தேடுவதும், தேடிய பொருளைச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்துக் காத்தலும், நேர் வழியில் தவறாமல் நடந்து, நல்வழியில் தான் தேடிய பொருளில் ஒரு பகுதியை பிறர் நலன் கருதி நற்செயல்களுக்காகச் செலவு செய்வதும் ஒழுக்க முடைமையாகும்.

தாய்க்கும், தந்தைக்கும் சேவை செய்தலும், மனைவி மக்களை அன்புடன் அரவணைத்துக் காத்தலும், உற்றார் உறவினர் உறவுகளைப் போற்றி வளர்த்தலும் ஒழுக்கமுடைமையாகும்.

அன்பும், பணிவும், இனிய சொற்களும், தம்மை வெறுப்பவரிடத்தும் உள்ளத்தில் பகை பாராட்டாமையும், துன்பம் வந்தவிடத்து உதவுதலும் ஒழுக்க முடைமையாகும்.

பொறுமையும், குற்றமில்லாச் சொற்களும், துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும், துன்பம் வந்த போதும் நன்னெறி தவறாமல் நடப்பதும் ஒழுக்க முடைமையாகும்.

பக்தியும், நோன்பும், தானமும், நிதான உணவும், உடல் நலத்தை நல்ல பழக்கங்களால் காத்தலும், ஒழுக்க முடைமையாகும்.

நன்றி மறவா நெஞ்சமும், செல்வம் வந்த போதும் உறவை மறக்காத வாழ்வும், பிறருடைய செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளாத பண்பும், தன்னைத் தேடி வந்தோரை வெறுத்தொதுக்காத் தன்மையும், ஒழுக்க முடைமையாகும்.

தன்னைத் தானே புகழ்ந்து போற்றிக் கொள்ளாமலும், அறிவுடையோர் போற்றுகின்ற போது நாணமடைதலும், அறிவற்ற மக்கள் தூற்றுகின்ற போது பொறுமை காத்தலும், மனதில் எழும் கோபத்தை அடக்கும் வலிமையும் ஒழுக்கமுடைமையாகும்.

நாண வேண்டிய கருமங்களுக்கு நாணியும், நாண வேண்டாத கருமங்களுக்கு நாணாமலும், அஞ்ச வேண்டிய கருமங்களுக்கு அஞ்சியும், அஞ்ச வேண்டாத கருமங்களுக்கு அஞ்சாமையும், நடுவு நிலைமை தவறாத நெறியும், நன்மை, தீமை இரண்டையும் சீர்தூக்கி முடிவு செய்யும் ஆற்றலும் ஒழுக்க முடைமை யாகும்.

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருக்கும்போது, , நிறவெறியை எதிர்த்துச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினார். அப்பொழுது அவர் மகாத்மா என்று பெயர் பெற்றிருக்கவில்லை. இதற்கிடையில் அவர் இந்தியாவிற்கு வந்தார். அப்பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சி:

***ஒருமுறை காந்திஜி இரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். காந்திஜி இருந்த இரயில் பெட்டியில் ஒருவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் பலமுறை வண்டிக்குள்ளேயே எச்சில் துப்பினார். காந்திஜி ஒன்றும் சொல்லாது, அந்த எச்சிலை ஒரு காகிதத்தால் துடைத்தார். காந்திஜி துடைத்ததைக் கண்ட அந்த மனிதர் "இந்த மனிதர் என்னைத் தலை குனிய வைக்கிறார்" என்று நினைத்தார். மீண்டும் அவர் எச்சில் துப்பினார். காந்திஜி மீண்டும் தளராது அந்த எச்சிலைத் துடைத்தார்.***

***இரயில் வண்டி, இரயில் நிலையத்தை வந்து அடைந்தது. இரயில் நிலையம் முழுவதும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. மக்கள் யாவரும் காந்திஜிக்கு ஜே!" என்று முழங்கினர். இரயில் வண்டி நின்றதும், மக்கள் கூட்டம் காந்திஜி இருந்த பகுதியை நோக்கி ஓடி வந்தனர். எச்சிலைத் துடைத்த மனிதர், மக்களுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்தார். மக்களுடைய வணக்கத்தையும் ஏற்றுக் கொண்டார்.***

**இவையாவற்றையும் கண்ணுற்ற எச்சில் துப்பிய மனிதர், செயலற்று நின்று விட்டார்; உடனே பாய்ந்து சென்று, காந்திஜியின்**

**கால்களைப் பற்றிக் கொண்டு, பலமுறை மன்னிப்புக் கேட்டார். அதற்குக் காந்திஜி "மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை. நான் என் கடமையைத்தான் செய்தேன். இம்மாதிரி உங்களுக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தால், தயங்காமல் நீங்களும் இவ்வாறே செய்யுங்கள்" என்று கூறினார்.**

நல்லொழுக்கம் ஈருலகிலும் நன்மை தரும். தீயொழுக்கம் ஈருலகிலும் துன்பம் தரும். ஆகவே, தீயொழுக்க முடையோர் வாழ்வில் நன்மையை அடையார்.

அறிஞர்களை மதியாது செருக்கித் திரிகின்றவனும்; பெரியோர் கூறும் நல்லுரைகளைப் பரிகசிக்கும் பேதையும், நல்லுரை கேட்காத இளையோரும்; இளமையில் கருத்துடன் கல்வி கற்காதவனும்; பொய்யுரைகளைப் பேசித் திரியும் புழுகனும், வெறுப்பான சொற்களை விரும்பி உரைப்பவனும்; பிறர் பொருளை வஞ்சிப்பவனும் வாழ்வில் நன்மையை அடையார்.

போதையை விரும்பி மது அருந்துபவனும்; மயக்கத்தை விரும்பி போதைப் பொருட்களை உபயோகிப்பவனும்; சூதாடிப் பொருள் ஈட்ட விரும்புபவனும்; இச்சை கொண்டு தவறான முறையில் காமத்தை நாடி அலைபவனும்; மனைவியை அடித்துத் துன்புறுத்திக் கொடுமைப் படுத்துபவனும்; தாய் தந்தையருக்கு முதுமை வந்த காலத்தில் சேவை செய்யாதவனும், வாழ்வில் நன்மையை அடையார்.

விதியை நம்பி உழைப்பில் நம்பிக்கை வைக்காதவனும்; குடும்பத்தார் பசித்திருக்க வீண் சோம்பல் கொள்பவனும்; பகட்டை விரும்பி ஆடம்பரச் செலவு செய்பவனும்; பிறர் குறையைக் காண்பதிலேயே நாட்டமுள்ளவனும்; எப்போதும் கோபக்குறியுடன் இருப்பவனும்; வாழ்வில் நன்மையை அடையார்.

பிறர் நன்மையைக் கண்டு பொறாமை கொண்டு கேடு செய்பவனும், நண்பர்களை புறங்கூறித் திரிபவனும்; நட்புடையோரிடம் பொய்யுரைத்து ஏமாற்றும் வஞ்சகனும்; செய்நன்றி மறந்து கேடு செய்பவனும்; தன்னலங்கருதி ஒட்டியிருந்து காரியமாற்றும் வஞ்சகனும் வாழ்வில் நன்மையை அடையார்.

தன் குற்றங்களைப் பிறர் அறியாதவாறு மறைத்து நல்லவனைப் போல் நடிக்கும் வேடதாரியும்; முதுமை வந்தும், உள்ளத்தில் அறமும், பக்தியும் இல்லாமல், புண்ணிய காரியங்கள் ஏதும் செய்யாமல், நல்லோர் செய்யும் தொண்டை இகழ்ந் துரைப்பவனும் பலாத்காரத்தால் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்பவனும் பிறரைத் தூண்டி விடுபவனும்; வம்பு வளர்ப்பவனும்; முரடனும் பேராசைக்காரனும் வாழ்வில் நன்மையை அடையார்.

பகவான் புத்தர் வாழ்ந்த காலத்தில், இந்தியாவில் சிராவஸ்தி என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில் கணவன் மனைவி இருவர் வாழ்ந்தனர். மனைவி, பத்திக்கா என்ற நிர்வாணத் துறவியிடம் பக்தி கொண்டு, அவருக்குப் பணி செய்து வந்தாள். பகவான் புத்தர் சிராவஸ்தி பட்டணம் வந்து, அங்குச் சில காலம் தங்கி, அப்பட்டணத்து மக்களுக்குத் தர்ம உபதேசம் செய்து வந்தார்.

மேற்குறிப்பிட்ட பக்தையின் அண்டை வீட்டுக்காரர்களில் சிலர், பகவான் புத்தரின் உபதேசத்தைக் கேட்கச் சென்றார்கள். பகவான் புத்தரையும், அவருடைய உபதேசத்தையும் இவர்கள் பாராட்டிப் புகழ்ந்து பேசுவதை மனைவி கேள்விப்பட்டாள். தானும் போய் தர்ம உபதேசம் கேட்க வேண்டும் என்ற அவா அவள் உள்ளத்தில் எழுந்தது.

தன் குருவான நிர்வாணத் துறவியிடம் சென்று, ஐயா, நான் புத்தரிடம் சென்று தர்ம உபதேசம் கேட்க விரும்புகிறேன்" என்று கூறினாள். நிர்வாணத் துறவி, " அங்குப் போகாதே, அங்குப் போனால் உனக்கு நன்மை வராது, கேடு வரும்" என்று கூறி அவளைத் தடுத்துவிட்டார். பலமுறை இவள் துறவியிடம் போய் அனுமதி கேட்ட போதிலும், ஒவ்வொரு தடவையும், நிர்வாணத் துறவி பல காரணங்களைக் கூறி, அவளைத் தடுத்து வந்தார்.

ஆனால், இவள் உள்ளத்தில், தானும் சென்று தர்ம உபதேசம் கேட்க வேண்டும் என்னும் ஆர்வம் வளர்ந்ததேயன்றி குறையவில்லை. "என் குரு, நான் பகவான் புத்தரிடம் சென்று தர்ம உபதேசம் பெறுவதை மறுக்கின்றார். ஆகவே, நான் பகவான் புத்தரை என் வீட்டிற்கு அழைத்து, வீட்டிலேயே அவ்வுபதேசத்தைக் கேட்பேன்" என உறுதி பூண்டாள்.

தன் மகனை அழைத்து, "புத்தரிடம் போய், நாளை நம் வீட்டிற்கு விருந்துண்ண வரும்படி நான் வேண்டிக் கொள்கிறேன் என்று கூறி, பகவானுடைய அனுமதியைப் பெற்று வா" என்றாள்.

மகன் முதலில் நிர்வாணத் துறவியின் இல்லத்திற்குச் சென்று, அவரை வணங்கி, அவரிடம் யாவற்றையும் கூறிய பின் "என் தாயாருடைய உத்தரவின்படி, பகவான் புத்தரை எங்கள் இல்லத்திற்கு அழைக்கச் செல்கிறேன்" என்று கூறினான்.

"நீ அங்குப் போகக் கூடாது" என்று துறவி பையனைத் தடுத்தார்.

“நான் என் தாயாருக்கு அஞ்சுகிறேன், நான் அங்குப் போய் என் தாயார் கூறியபடி பகவான் புத்தரை அழைக்கப் போகிறேன்" என்று பையன் கூறினான்.

"உன் தாயார் சமைக்கும் ஆகாரங்களை நாம் இருவரும் சாப்பிடலாம். நீ அங்குப் போய் அவரை அழைக்காதே" என்று துறவி பையனிடம் கூறினார்.

“என் தாயார் என்னைக் கடிந்து திட்டுவாள்” என்று கூறியப் பையன் தயங்கினான்.

"அப்படியானால் போ. ஆனால், அங்குப் போய் நீ அவரை அழைத்த பின், உங்கள் வீடு எந்தத் தெருவில் இருக்கிறது, வீட்டிற்கு வரும் வழி எப்படி, என்பனவற்றை விளக்கிச் சொல்லாதே. உன் அழைப்பை அவர் ஏற்றதும், வேறு வழியாக இங்கு ஓடி வந்துவிடு" என்று கூறினார்.

பையனும் நிர்வாணத் துறவி கூறியது போல், பகவான் புத்தரிடம் சென்று தன் தாயாரின் வேண்டுகோளைத் தெரிவித்த பின், வேறு வழியாக நிர்வாணத் துறவியின் இல்லத்திற்கு ஓடி வந்து, அவர் கூறியதுபோல் பகவான் புத்தரிடம் கூறியதாகத் தெரிவித்தான். நிர்வாணத் துறவியும் பையனைப் பாராட்டி "அந்த மனிதருக்கு உன் தாயார் யார் என்று தெரியாது. வீடு எந்த வீதியில் உள்ளது என்பதும் தெரியாது. ஆகவே நாளைக்கு அந்த மனிதர், உங்கள் வீட்டிற்கு வரமாட்டார். உன் தாயார் சமைக்கும் பலவகை உணவை, நாம் இருவருமே சுவைத்து உண்ணலாம். உன் தாயாரிடம் நீ அவரை அழைத்து விட்டதாகவும், வீட்டிற்கு வழி கூறி விட்டதாகவும் கூறிவிடு" என்று கூறி பையனை அனுப்பி வைத்தார்.

மறுநாள் காலையில் பையனின் தாயாரும், அண்டை வீட்டுக்காரர்களும், வீட்டைச் சுத்தம் செய்து, பூந்தோரணங்கள் கட்டினார்கள். பலவகையான உணவுகளைச் சமைத்தார்கள். காலையிலேயே நிர்வாணத் துறவி வீட்டிற்கு வந்து விட்டார். பையனை அழைத்துக் கொண்டு, வீட்டின் பின் அறை ஒன்றில் போய் அமர்ந்து கொண்டார். பையனிடம் "அந்த மனிதருக்கு வீட்டிற்கு வரும் வழி தெரியாது, நாம் இருவரும் இன்று பலவித சுவையான உணவு வகைகளை உண்ணலாம்" என்று கூறினார்.

(பூரண ஞான அறிவு பெற்ற பகவான் புத்தருக்கு வழிகாட்டி தேவையில்லை என்பதை சிலர் அறிவதில்லை. தம் பூரண ஞான அறிவினால், எல்லா உலகங்களுக்கும் வழி அறிந்தவர் புத்தர். இந்த வழி நரகப் பிறப்பிற்குப் போகும்; இந்த வழி மனிதப் பிறப்பிற்குப் போகும்; இந்த வழி தெய்வலோகப் பிறப்பிற்குப் போகும்; இந்த வழி மோட்சத்திற்குப் போகும்; என எல்லா உலகங்களுக்கும் வழி அறிந்த புத்தருக்கு, கிராமங்களிலும், பட்டணங்களிலும் வழிகாட்டி தேவையில்லை என்பதை சிலர் அறிவதில்லை.)

உணவருந்தும் நேரம் வந்ததும், பகவான் புத்தர் கையில் பிச்சைத் தட்டை ஏந்தி, நேராக வீட்டிற்கு வந்தார். பையனுடைய தாயார், அவரை வரவேற்று, வணக்கம் தெரிவித்த பின், உணவு பரிமாறினாள். பகவான் புத்தர் உண்டு, கை கழுவிய பின், பையனின் தாயாரும், அண்டை வீட்டுக்காரர்களும் தர்ம உபதேசம் கேட்பதற்காக அமர்ந்தார்கள். பகவான் புத்தர் அங்குக் கூடியிருந்த அனைவருக்கும் தர்ம உபதேசம் செய்தார். பையனின் தாயாரின் மனம்

முழுமையாக தர்ம உபதேசத்தில் ஒன்றிவிட்டது. "அருமையான உபதேசம், இனிமையாக உபதேசம் செய்தீர்கள்" என்று மனமகிழ்ந்து பகவான் புத்தரைப் புகழ்ந்து பாராட்டினாள்.

பின்னறையில் அமர்ந்திருந்த நிர்வாணத் துறவி, பகவான் புத்தரின் தர்ம உபதேசத்தையும், பையனின் தாயார் அவரைப் புகழ்ந்து பாராட்டியதையும் கேட்டார். பொறாமையும், சினமும் அவர் மனதை ஆட்கொண்டன.

தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், அறையிலிருந்து வெளியே வந்து, பையனின் தாயாரைப் பார்த்து, "ஏ கிழவி, நீ இந்த மனிதரைப் புகழ்ந்து பாராட்டியதால், உனக்கு அழிவு வரப்போகிறது. நீ இனிமேல் என் சிஷ்யை இல்லை" என்று கூறி எல்லாருக்கும் முன்னால் அவளைக் கடும் சொற்களால் கடிந்து திட்டினார். பின் பகவான் புத்தரையும், கடும் சொற்களால் திட்டித் தீர்த்தார். கடுஞ்சினத்தில் தன்னைக் கட்டுப் படுத்த முடியாமல், பையனின் தாயாரை, "நீ அழிந்து போவாய் என்று சபித்து, பகவான் புத்தரையும் சபித்து விட்டு, அங்கிருந்து விரைந்து அகன்றார்.

நிர்வாணத் துறவியின் நடத்தை, பையனின் தாயாருக்கு மிகுந்த அவமானத்தை ஏற்படுத்திற்று. இந்த தர்ம சங்கடமான சூழ்நிலையில், மனக்குழப்பத்தோடு அவமானத்தால் தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

இதைக் கண்ட பகவான் புத்தர், அவளை அன்புடன் நோக்கி, "உன் மனம் குழம்பி உள்ளது. இவ்வகையான மனிதர்களின் பேச்சை எவரும் ஒரு பொருட்டாகக் கருதக் கூடாது. அதில் கவனம் செலுத்தக் கூடாது. நன்னெறிகளை அறியாமல், நல்லொழுக்கம் இல்லாமல் தவறான கருத்துகளையும், தவறான உபதேசங்களையும், செய்வோர் பேச்சை ஒரு பொருட்டாகக் கருதி அதில் கவனம் செலுத்தக் கூடாது. நீங்கள் ஒவ்வொருவரும், உங்களுடைய குற்றங் குறைகளைத் தேட வேண்டும். அப்போது குற்றங்களிலிருந்து விடுபட்டு, நன்னெறியில் ஒழுகி, பக்தியைப் பெறுவீர்கள். இதைச் செய்தீர்களென்றால் இதுவரை நீங்கள் கேட்ட தர்ம உபதேசம் உங்களுக்குப் பயனளிக்கும்" என்று கூறி அவளைச் சமாதானப் படுத்தினார்.

அந்த நிர்வாணத் துறவியிடம் நன்னெறி ஒழுக்கம் இல்லாததால், தீமையான எண்ணங்களை எண்ணி, தகாத சொற்களைப் பேசி, தாழ்ந்து போனார். அந்தத் துறவியைப் போல் இல்லற வாழ்வு வாழும் சிலர், நன்னெறி ஒழுக்கத்தை அறியாமல், தீமையான எண்ணங்களை எண்ணி, தகாத சொற்களைப் பேசி, தகாத செயல்களைச் செய்து, பிறரால் பழிக்கப்பட்டுத் துன்புறுவார்கள்.

நல்லொழுக்கம் இல்லாத அந்தத் துறவி, பகவான் புத்தர் கூறிய நல்லுரைகளை வெறுத்தார். நன்னெறிகளை உபதேசம் செய்த பகவான்

புத்தரையும், அவரின் தரும உபதேசங்களையும் புகழ்ந்து பாராட்டிய தன் சிஷ்யையையும் கடிந்து திட்டினார். இந்தத் துறவியைப் போல், ஒழுக்கம் இல்லாதோர், நன்னெறியில் ஒழுகுவோரின் நட்பை விரும்பமாட்டார்கள். அவர்களை வெறுத்துத் தூற்றுவார்கள். ஒழுக்கமற்றோர், ஒழுக்கமுடையோரின் ஒழுக்க நெறிகளைப் பரிகசித்தும், பழித்தும், இகழ்ந்தும் பேசுவார்கள். தங்களைப் போன்ற ஒழுக்கமற்றோர் நட்பை விரும்பி வளர்த்து, அவர்களைப் பெருமைப் படுத்திப் பேசுவார்கள்.

ஒழுக்க மற்றோர் பழிக்கு நாணார். பழிக்கு அஞ்சார். ஒழுக்க மற்றோர், பிறர் பழிக்கும் தீய சொற்களைப் பேசுவதற்கு நாணுவ தில்லை, அஞ்சுவதில்லை; பிறர் பழிக்கும் தகாத செயல்களைச் செய்வதற்கு நாணுவதுமில்லை, அஞ்சுவதுமில்லை.

எப்படி அந்தத் துறவி, பையனுக்குத் தவறான ஆலோசனைகளைக் கூறி, தவறு செய்யத் தூண்டினாரோ, அது போல, ஒழுக்கமில்லாதோர், பிறருக்கும் தவறான உபதேசங்களைச் செய்து, தவறான ஆலோசனைகளையே கொடுப்பார்கள். ஆகவே, தீயொழுக்கம் உடையோரின் நட்பினால், ஒருவன் தீயொழுக்கங்களைக் கற்று, தவறான கொள்கைகளை மேற்கொண்டு, பழிக்கு அஞ்சாமல், தீமையான எண்ணங்களை எண்ணி, தீமையான சொற்களைப் பேசி, தீமையான செயல்களைச் செய்து, கெடுவான். ஆகவே, நன்னெறி ஒழுக்க மில்லாதவனோடு நட்பு கொள்ளலாகாது.

இதையே, பகவான் புத்தர் இவ்வாறு கூறியுள்ளார்:

***"தீயோருடன் சேர வேண்டாம்; இழிந்தோருடன் உறவு கொள்ள வேண்டாம், ஒழுக்க முள்ளவரோடு உறவாடுக; ஒழுக்க முடையோரின் தொடர்பை மேற்கொள்க."***

பகவான் புத்தர் இப்படியும் கூறியுள்ளார்:

ஒருவர் தான் வாழ்வது கிராமமாக இருந்தாலும் சரி, பட்டணமாக இருந்தாலும் சரி, அவர் அங்குள்ள நல்லோரோடு நட்பு கொள்ள வேண்டும். நன்னெறி ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்ட இளைஞர்களோடும், நன்னெறி ஒழுக்கத்தில் முதிர்ந்த முதியோரோடும் நட்பு கொள்ள வேண்டும். நிரம்பிய பக்தியும், அறமும், தானமும், கல்வி அறிவும் உடையோரோடு நட்பு கொள்ள வேண்டும்.

நிரம்பிய பக்தி உடையவரோடு நட்பு கொண்டு, அவரைப்போல் தானும் பக்தியில் நிறைவு பெற முயல வேண்டும்; நிரம்பிய அறம் உடையவரோடு நட்பு கொண்டு, அவரைப் போல் தானும் அறத்தில் நிறைவு பெற முயல வேண்டும்; நிரம்பிய தானம் உடையவரோடு நட்பு கொண்டு, அவரைப் போல் தானும் தானத்தில் நிறைவு பெற முயல வேண்டும்; நிரம்பிய கல்வி அறிவு உடையவரோடு

நட்பு கொண்டு, அவரைப் போல் தானும் கல்வியில் நிறைவு பெற முயல வேண்டும்.

ஒழுக்கம் உயிருக்கு மேன்மை தருமாதலால், ஒழுக்கத்தை உயிரினும் மேம்பட்டதாகக் கருதி, காக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

***ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்***
***உயிரினும் ஓம்பப் படும்.***

அனைவருக்கும் ஒழுக்கம் வாழ்வில் மேன்மை அளிக்கும். நல்லொழுக்கத்தால் ஒருவருக்கு வாழ்வில் பெருமையும், புகழும் உண்டாகும். வாழ்வில் உயர்வைத் தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேம்பட்டதாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும்.

***ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்***
***இழிந்த பிறப்பாய் விடும்.***

எப்படி அந்தத் துறவி, மக்கள் மதித்து மரியாதை செய்யும் துறவுக் கோலம் பூண்டும், தீயொழுக்கத்தால் தாழ்ந்து போனாரோ, அது போல் எவ்வளவு உயர்ந்த குடியில் பிறந்தவராயினும், நல்லொழுக்கம் தவறினால், இழிந்த பிறப்பினனாய் விடுவான். ஆகையால், நல்லொழுக்க முடைமையே, உண்மையான உயர் குடிப் பிறப்பாகும்.

***அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை***
***ஒழுக்கம் இலான்கண் உயர்வு.***

பொறாமை உடையவனிடம், செல்வம் நிலைபெற்று நிற்காது. அது அவனை விட்டுப் போய்விடும். அது போல் ஒழுக்கம் கெட்டவனிடத்தில், உயர்வு இல்லாமல் போய்விடும். அதாவது பொறாமை ஒருவனுடைய செல்வத்தை அழிப்பது போல், ஒழுக்கமின்மை ஒருவரின் பெருமையையும், புகழையும் அழிக்கும்.

***ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்***
***எய்துவர் எய்தாப் பழி.***

எல்லாரும் ஒழுக்கத்தால் சிறப்பை அடைவார்கள். ஒருவருக்கு ஒழுக்கம் கெட்டால் அவர் அடையத் தகாத பெரும்பழியை அடைவார்.

# பெற்றோரிடம் ஒழுக்கம் இருந்தால் பிள்ளைகளிடம் ஒழுக்கம் இருக்கும்

பெற்றோரிடம் ஒழுக்கம் இருந்தால்தான் பிள்ளைகளிடம் ஒழுக்கம் இருக்கும். பெற்றோரிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால், பிள்ளைகளிடம் எங்ஙனம் ஒழுக்கம் இருக்கும். தம் பிள்ளைகள் நன்னெறியில் ஒழுக வேண்டும் என விரும்பும் பெற்றோர், தாம் முதலில் நன்னெறியில் நிலைபெற வேண்டும். தாமும் நன்னெறிகளைக் கற்று நல்வழியில் நடந்து தம் பிள்ளைகளையும் நன்னெறி ஒழுக்கத்தில் வளர்க்க வேண்டும்.

ஒரு நாள் காலையில், ஒரு கிராமத்தான் தன் ஆறு வயது மகனைத் தோளில் சுமந்து கொண்டு, பக்கத்து ஊரில் நடந்து கொண்டிருந்த சந்தைக்குச் சென்று கொண்டிருந்தான். அவ்வழியே ஒரு விவசாயி கூடை நிறைய வாழைப் பழங்களைத் தலையில் சுமந்து சென்றான். சந்தை தொடங்கும் நேரமாகி விட்டதே என்று எண்ணிக் கொண்டு அவன் விரைந்து இவர்களைக் கடந்து சென்றான். தந்தையின் தோளில் அமர்ந்திருந்த அந்தப் பையன் விவசாயி அறியா வண்ணம் அவர் இவர்களைக் கடக்கும் போது ஒரு பழச் சீப்பை எடுத்துக் கொண்டான். விவசாயி இவர்களைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் மகன் தந்தையிடம் பழத்தைக் காண்பித்துத்தான். விவசாயியின் கூடையிலிருந்து பழத்தை எடுத்ததாகக் கூறினான்.

இதைக் கண்ட தந்தை மகனை "நீ கெட்டிக்காரன்" என்று பாராட்டினார். "நாம் இப்பழத்தைப் சாப்பிட்டுக் களைப்பாறலாம்" என்று கூறி, வழியில் ஒரு மரத்தடியில் அமர்ந்து, இருவரும் பழத்தை உண்டனர்.

அதன்பின் பையன், பிறர் தோட்டங்களிலும், வீடுகளிலும், திருடி வந்தான். தந்தையிடம் ஒழுக்கம் இல்லாததால், தன் மகனுடைய தீயொழுக்கத்தைக் கண்டும், அவனுக்கு நன்னெறிகளையும், நல்லொழுக்கத்தையும் கற்றுத்தரத் தவறினார். கிராமத்தில் பிறர் தோட்டங்களிலும், வீடுகளிலும் திருடிப் பழகியவன், வாலிபன் ஆனதும், இதில் பெரும் இலாபம் இல்லையென அதிருப்தி அடைந்து, பட்டணம் சென்றால் அதிக இலாபம் தரும் பொருட்களைத் திருடலாம் என எண்ணி, பட்டணம் சென்றான்.

பட்டணத்தில், கடைகளிலும், சந்தைகளிலும் திருடினான். பிறகு பிறர் வீடுகளில் புகுந்து கொள்ளையிட்டான். ஓர் இரவு, ஒரு வீட்டில் புகுந்து திருடும்போது, வீட்டில் உள்ளவர்கள் எழுந்து கொண்டனர். இவன் திருடிய பொருள்களைப் போட்டுவிட்டு ஓடினான். இதை அறிந்த வீட்டினர், திருடன், திருடன் எனக் கூக்குரல் போட்டு, துரத்தினர். கூக்குரலைக் கேட்ட அண்டை வீட்டாரில் சிலர், அவனைத் துரத்திச் சென்று, பிடித்து, நன்றாக அடித்துக் கயிற்றில் கட்டி, காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

திருடிய குற்றத்திற்காக அவன் தண்டனை விதிக்கப்பட்டு சிறைக்குச் சென்றான். சிறையில், பொருட்களைக் கள்ளக்கடத்தல் செய்ததற்காகவும், போதைப் பொருள்களைக் கடத்தி விநியோகம் செய்த குற்றங்களுக்காகவும் தண்டனை பெற்ற சில கள்ளக் கடத்தல் கும்பலைச் சேர்ந்த கைதிகள் அங்கே இருந்தார்கள். இவன் அவர்களோடு நட்பு கொண்டபின், திருட்டைவிட, கள்ளக் கடத்தலில் அதிகம் சம்பாதிக்கலாம் என எண்ணினான்.

தண்டனைக் காலம் முடிந்து சிறையிலிருந்து வெளியானதும், தன் நண்பர்களின் உதவியால், கள்ளக் கடத்தல் கும்பலில் சேர்ந்தான். கடத்தல் கும்பலோடு சேர்ந்து, பொருள்களையும், போதைப் பொருள்களையும், கடத்தல் செய்தான். கள்ளக் கடத்தலில் அவனுக்குக் கை நிறையப் பணம் கிடைத்தது. ஆடம்பர உடைகளிலும், குடியிலும், விபச்சாரத்திலும், தப்பான வழியில் ஈட்டிய பணத்தைச் செலவழித்தான். இடையிடையே கிராமத்திற்குச் சென்று, தன் தந்தைக்குப் பணம் கொடுத்தான். கிராமத்து மக்களிடம் தான் வெளி நாடுகளிலிருந்து, பொருட்களை இறக்குமதி செய்வதாகவும், அதில் தனக்குப் பெரும் இலாபம் கிடைப்பதாகவும், தன்னைப் பெருமைப் படுத்திப் பேசினான்.

ஓர் இரவு, வெளி நாட்டுக் கப்பலிலிருந்து கடத்தல் செய்து, ஒளித்து வைத்தப் பொருள்களை எடுக்க, இவனும், கடத்தல் கும்பலைச் சேர்ந்த சிலரும் சென்றனர். உளவு கிடைத்து, அங்கு சென்று மறைந்திருந்த சில அதிகாரிகள், இவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.nஅதிகாரிகளுக்கும், கடத்தல் கும்பலுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில், இவன் குண்டடி பட்டு இறந்தான்.

தந்தைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, பட்டணம் வந்து சேர்ந்தார். தந்தையிடம், அவன் மகன் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவனென்றும், கடத்தல் கும்பலுக்கும் அதிகாரிகளுக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில், குண்டடிபட்டு இறந்தானென்றும் தெரிவித்து, உடலை தகப்பனாரிடம் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

மகனுடைய பிரேதத்தைப் பார்த்த தந்தை, மகன் ஆறு வயது குழந்தையாக இருந்த போது, பழம் திருடியதையும், தான் அவனைப் பாராட்டியதையும், தொடர்ந்து அவன் கிராமத்தில் திருடியதையும் நினைத்து, " இவன் இக்கதியை அடைவதற்குத் தானும் ஒரு காரணம்" என எண்ணி வருந்தினான். அன்றே, அவன் பழம் திருடிய போதே அவனைக் கண்டித்து, திருடுவது குற்றமென அறிவுறுத்தி, நன்னெறி ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுத்திருந் தேனென்றால், இன்று அவனுக்கு இக்கதி வந்திருக்காது. எனக்கும் பழியும் அவமானமும் வந்திருக்காது என எண்ணி வேதனையுற்றான்.

தந்தையிடம் நன்னெறி ஒழுக்கம் இல்லாததால், மகனுக்கு இளம் வயதிலேயே, நன்னெறி ஒழுக்கங்களைக் கற்றுத்தரத் தவறினார். அவன் தீய பழக்கங்களைப் பழகி, தீயோரோடு சேர்ந்து, தீய செயல்களைச் செய்து, தீய

கதியை அடைந்தான். மகனுடைய தீய ஒழுக்கத்தால், தந்தையும் பிறரால் பழிக்கப்பட்டு அவமானமடைந்தார். ஆகவே, ஒவ்வொரு பெற்றோரும், தம் பிள்ளைகளுக்கு, இளம் வயதிலேயே, நன்னெறிகளையும், நல்லொழுக்கங்களையும், கற்றுத் தர வேண்டும். பிள்ளைகளின் நல்வாழ்வைக் கருதி, ஒவ்வொரு பெற்றோரும் இதைச் செய்வது அவர்தம் கடமையாகும்.

நன்னெறிகளைக் கற்பவன் நன்மை தீமைகளை அறிவான். நன்மை, தீமைகளை அறிந்தவன் அறிவுடைமையைப் பெறுவான். அறிவுடைமையைப் பெற்றவன், நன்மை தீமை எதுவென அறிந்து, கெடுதி விளைவிக்கும் தீமையை விட்டு, நன்மை பயக்கும் நல்வழியில் நடப்பான். நல்வழியில் நடப்பவன் நன்னெறியில் நிற்பான். நன்னெறியில் நிற்பவன் ஒழுக்கமுடையவனாவான். நல்லொழுக்கமுடையவன் பெருமையும் புகழும் அடைவான்.

நன்னெறிகளைக் கல்லாதவனிடம், நன்மை தீமைகளை அறியும் அறிவுடைமையும், நல்வழியில் நடப்பதற்குரிய மன வலிமையும் இருக்காது. நன்மை தீமை அறியும் அறிவுடைமையும், நல்வழியில் நடப்பதற்குரிய மன வலிமையும் இல்லாதவனிடம் நல்லொழுக்கம் இருக்காது. ஒழுக்க மில்லாதவன் வாழ்க்கை மேற்கூறப்பட்ட கதையைப் போல் துன்பத்தில் முடியும்.

இளமையில் தீய பழக்கங்கள் மிகவும் கவர்ச்சியாகத் தோன்றும். தீயோரின் கவர்ச்சியான சொற்களும், தீய பழக்கங்களில் கிடைக்கும் இன்பமும், இளைஞர்களை எளிதில் கவரும். தீயோரோடு நட்பு கொண்டு, தீய ஒழுக்கங்களைக் கற்று, தீய பழக்கங்களைப் பழகி விட்டால் அதிலிருந்து விடுபடுவது மிகவும் கடினம்.

தீயோரின் நட்பும், தீயொழுக்கமும், தீய பழக்கங்களும், தவறான கொள்கைகளும், ஒருவனுடைய வாழ்வின் மேன்மையைக் கெடுப்பதோடு மட்டுமின்றி, பெற்றோருக்கும் அதனால் பிறரால் பழியும், அவமானமும் வந்து சேரும்.

தீயோரிடமிருந்தும், தீயொழுக்கங்களைக் கற்காமலிருக்கவும், தீய பழக்கங்களைப் பழகாமலிருக்கவும், தவறான கொள்கைகளை மேற்கொள்ளாதிருக்கவும், பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எப்படிப் பாதுகாப்பு அளிப்பது?

இப்பாதுகாப்பு எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், எப்போதும் கூடவே இருக்க வேண்டிய பாதுகாப்பு. எவ்வகையான பாதுகாப்பு எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் தன்னுள்ளிருந்தே தன்னைப் பாதுகாக்கும்? நன்னெறிகளைக் கற்று, நன்மை தீமைகளை அறியும் அறிவுடைமையே எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் தன்னுள்ளிருந்து தன்னைப் பாதுகாக்கும் பாதுகாப்பு ஆகும்.

இப்பாதுகாப்பை எப்படிப் பெறுவது? நன்னெறிகளைக் கற்பதனாலும், பெரியோர் சொல்லும் நல்லுரைகளைக் கேட்பதனாலும், இப்பாதுகாப்பைப் பெறலாம். நன்னெறிகளைக் கற்பவன் நன்மை பயக்கக் கூடியவை எவை என்றும், கேடு விளைவிக்கக் கூடியவை எவை என்றும் அறிவான். நன்மையளிக்க கூடியவை எவை என்றும், கெடுதி விளைவிக்கக் கூடியவை எவை என்றும் அறிந்தவன் அறிவுடைமையைப் பெறுவான்.

அறிவுடைமையைப் பெற்றவன், நன்னெறியில் நிற்பான். நன்னெறியில் நிற்பவன், கெடுதி விளைவிக்கக்கூடிய தீமைகளை விட்டு, நன்மை பயக்கக் கூடிய நல்வழியில் நடப்பான். நல்வழியில் நடப்பவன் ஒழுக்க முடையவன் ஆவான். நல்லொழுக்கமுடையவன், பெருமையும், புகழும் அடைவான்.

ஒரு கணக்குப் பரிசோதகர், (எக்கவுண்டன்) தன் தந்தை தனக்கு இளமையில் கற்றுக் கொடுத்த ஒழுக்க நெறியை இவ்வாறு கூறுகிறார்:

நான் அப்போது பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் ஒரு டென்னிஸ் பந்து கிடப்பதைக் கண்டேன். பந்தை எடுத்து நான் பையில் மறைத்து வைத்துக் கொண்டேன் பந்தை வீட்டிற்கு எடுத்துச்சென்று, அன்று மாலை விளையாடிக் கொண்டிருந்தேன்.

நான் டென்னிஸ் பந்தை விளையாடுவதைக் கண்ட என் தந்தை, என்னை அழைத்து, "பந்து உனக்கு எப்படிக் கிடைத்தது" என்று கேட்டார்.

"பள்ளி விளையாட்டு மைதானத்தில் கண்டெடுத்தேன்" என நான் கூறினேன்.

"நீ விளையாட்டு மைதானத்தில் கண்டெடுத்த பந்து உனக்குச் சொந்தமாகாது. இந்தப் பந்து இன்னொருவரின் பொருள். நீ இன்னொருவரின் பந்தை அபகரிப்பது திருடுவதாகும். பிறர் பொருளைத் திருடுவது குற்றம். நாளைக்குப் பள்ளிக்குப் பந்தை எடுத்துச் சென்று, எங்கு பந்தைக் கண்டெடுத்தாயோ அங்கேயே வைத்துவிட வேண்டும்" என என் தந்தை எனக்குக் கட்டளையிட்டார்.

மறுநாள் காலை என் தந்தை என்னைப் பள்ளிக்கு அழைத்துச் சென்றார். பந்தைக் கண்டெடுத்த இடத்தைக் காண்பிக்கச் சொன்னார். நான் அவரிடம், பள்ளியின் விளையாட்டு மைதானத்தில், பந்தைக் கண்டெடுத்த இடத்தைக் காண்பித்தேன். பந்தைக் கண்டெடுத்த இடத்திலேயே வைக்கச் சொன்னார். அவர் கூறியது போல், பந்தை விளையாட்டு மைதானத்தில், பந்தைக் கண்டெடுத்த இடத்திலேயே வைத்தேன். பின் என் தந்தை என்னிடம்" இனி மேல் பிறர் பொருளை நீ அபகரிக்கக் கூடாது." என்று அறிவுறுத்திவிட்டுச் சென்றார்.

தந்தையிடம் நன்னெறி ஒழுக்கம் இருந்ததால், மகனுக்கு நல்லொழுக்கத்தை கற்றுக் கொடுத்தார். மகனும் கல்வி கற்று, உத்தியோகம் செய்யும் போதும், அந்நல்லுரையை மறக்கவில்லை.

கல்விக்கு ஒழுக்கம் மிக அவசியமாகும். நல்லொழுக்கம் உடையோரே கல்வியில் சிறந்து விளங்குவர். ஆகவே, பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு, இளம் வயதிலிருந்தே, கல்வியோடு பக்தியையும், நன்னெறி ஒழுக்கத்தையும், கற்றுத் தர வேண்டும். கல்வி அறிவும், பக்தியும், நன்னெறி ஒழுக்கமும், ஒருவனை தீயோரிடமிருந்தும், தீய பழக்கங்களிலிருந்தும், தீயொழுக்கங்களிலிருந்தும், தவறான கொள்கைகளிலிருந்தும் பாதுகாக்கும்.

கல்வி அறிவும் பக்தியும், நன்னெறி ஒழுக்கமும் உடையோர், இளமைப் பிராயத்திலும், வாலிபப் பருவத்திலும், முதுமையிலும் பெருமையும், புகழும் அடைவர். கல்வியும், பக்தியு ம் , நன்னெறி ஒழுக்கமும் உடைய இளைஞர்கள், ஊக்கமும், உயர்ந்த குறிக்கோளும் உடையவர்களாகவும், நற்பண்புகள் உடையவர்களாகவும், நல்லோர் புகழும் நற்செயல்களைச் செய்பவர்களாகவும், பெற்றோருக்குப் பெருமையும், புகழும் தேடித் தருபவர்களாகவும் சிறந்து விளங்குவார்கள்.

திருவள்ளுவர், பெற்றோரின் கடமை என்ன என்பதை இவ்வாறு கூறியுள்ளார்:

***தந்தை மகற் காற்றும்நன்றி அவையத்து***
***முந்தி இருப்பச் செயல்.***

தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய உதவி, மகனைக் கல்வியிலும், நன்னெறி ஒழுக்கத்திலும், சிறந்தவனாக்கி, கற்றவர் மத்தியில் தன் மகன் கல்வியிலும், நன்னெறி ஒழுக்கத்திலும், சிறந்தவனாக இருக்கச் செய்வதேயாகும்.

தம் பிள்ளைகள் நன்னெறி ஒழுக்கத்தில் நிலைபெற வேண்டும் என விரும்பும் பெற்றோர், தாம் முதலில் நன்னெறியில் நிற்க வேண்டும். ஏன்? பெற்றோரிடம் ஒழுக்கம் இருந்தால், பிள்ளைகளிடமும் ஒழுக்கம் இருக்கும். பெற்றோரிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால், பிள்ளைகளிடம் எங்ஙனம் ஒழுக்கத்தை எதிர் பார்க்க முடியும்? தம் பிள்ளைகள் நன்னெறியில் ஒழுக வேண்டும் என விரும்பும் பெற்றோர், தாம் முதலில் நன்னெறியில் நிலைபெற வேண்டும்.

ஆசிரியரிடம் ஒழுக்கம் இருந்தால் அவர் கற்றுத் தரும் மாணவர்களிடம் ஒழுக்கம் இருக்கும். ஆசிரியரிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால், அவர் கற்றுத் தரும் மாணவர்களிடம் எங்ஙனம் ஒழுக்கத்தை எதிர் பார்க்க முடியும்? தம் மாணவர்கள் நன்னெறியில் ஒழுக வேண்டும் என எதிர்பார்க்கும் ஆசிரியர்கள், தாம் முதலில் நன்னெறியில் நிலைபெற வேண்டும்.

எஜமானரிடம் ஒழுக்கம் இருந்தால், வேலையாட்களிடம் ஒழுக்கம் இருக்கும். எஜமானிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால், வேலையாட்களிடம் எங்ஙனம் ஒழுக்கம் இருக்கும்? தன் வேலைக்காரர்கள் நன்னெறியில் ஒழுக வேண்டும் என விரும்பும் ஓர் எஜமானர், தான் முதலில் நன்னெறியில் நிலைபெற வேண்டும்.

அதிகாரிகளிடம் ஒழுக்கம் இருந்தால், மக்களிடம் ஒழுக்கம் இருக்கும். அதிகாரிகளிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால், மக்களிடம் எங்ஙனம் ஒழுக்கம் இருக்கும்? மக்கள் நன்னெறியில் ஒழுக வேண்டும் என எதிர் பார்க்கும் ஓர் அதிகாரி, முதலில் தான் நன்னெறியில் நிலைபெற வேண்டும்.

## பிறருக்கு நன்னெறிகளை உபதேசம் செய்பவர் முதலில் தான் நன்னெறியில் நிலைபெற வேண்டும்

சிலர் நன்னெறிகளைக் கற்று, பிறருக்கு எடுத்துக் கூறிய போதிலும், தாம் அவ்வழியில் நடப்பதில்லை. கற்றும், பிறருக்கு நன்னெறி உபதேசங்களை எடுத்துக் கூறிய போதிலும், தாம் நன்னெறியில் நடப்பதில்லை. எதைச் செய்யக்கூடாதென்று பிறருக்கு உபதேசம் செய்கிறார்களோ, அதை இவர்கள் செய்வார்கள். வேண்டுமென்று பிறருக்கு உபதேசம் செய்கிறார்களோ, அதை இவர்கள் செய்வதில்லை. எதைக் கண்டு, உள்ளம் நாணி அஞ்ச வேண்டுமென்று பிறருக்கு உபதேசம் செய்கிறார்களோ, அதைக் கண்டு இவர்கள் உள்ளம் நாணி அஞ்சுவதில்லை. எதை நாடக் கூடாதென்று பிறருக்கு உபதேசம் செய்கிறார்களோ, அதை இவர்கள் உள்ளம் நாடும். எதை நாட வேண்டுமென்று பிறருக்கு உபதேசம் செய்கிறார்களோ, அதை இவர்கள் உள்ளம் நாடுவதில்லை.

இவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருக்காது. எதைச் செய்ய நாவினால் அறத்தைப் பேசிய போதிலும், இவர்கள் உள்ளம் அறத்தை நாடுவதில்லை. பிறருக்கு அறத்தைக் கூறிய போதிலும், இவர்களிடம் அறம் இருக்காது. கற்றும், பிறருக்கு எடுத்துரைத்தும் , தாம் அவ்வழியில் ஒழுகாமல், நாடக் கூடாதவற்றை நாடி, செய்யக் கூடாதவற்றைச் செய்பவர்களை அறிவுடையவர் என்று எப்படிக் கூறுவது? ஒழுக்கமுடையவர் என்று எப்படிக் கூறுவது?

"அதர்ம வழியில் போக வேண்டாம்; தீயொழுக்கத்தை மேற்கொள்ள வேண்டாம்; என்று பிறருக்குக் கூறிய போதிலும், தாம் அதர்ம வழியில் நடந்து, தீயொழுக்கத்தை மேற்கொள்பவர்களை அறிவுடையார் என்று எப்படிச் சொல்வது? ஒழுக்கமுடையவர் என்று எப்படிக் கூறுவது?"

"அறவழியில் நடவுங்கள்; நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுங்கள்; அறவழியில் நடந்து, நல்லொழுக்கங்களை மேற்கொள்வோருக்கு, இங்கும் சுகம், அடுத்த உலகிலும் சுகம்" என பிறருக்கு உபதேசம் செய்தும், தான் அதர்ம வழியில் நடந்து, தீயொழுக்கத்தை மேற்கொண்டு, இங்கும் துன்புற்று, அடுத்த உலகிலும் துன்புறுபவரை அறிவுடையவர் என்று எவ்வாறு கூறுவது? ஒழுக்கமுடையவர் என்று எப்படிச் சொல்வது?"

"இழிந்தவரிடம் உறவு கொள்ள வேண்டாம், ஒழுக்கமுள்ளவரோடு உறவாடுக" என்று பிறருக்கு உபதேசம் செய்த போதிலும், தன் இலாபத்திற்காகவும், இன்பத்திற்காகவும் இழிந்தவரோடு உறவு கொண்டு தகாத செயல்களைச் செய்பவரை ஒழுக்கமுடையவர் என்று எப்படிக் கூறுவது?
பிறர் வியாதிக்கு மருத்துவம் கூறுபவர், தன் நோயை முதலில் குணப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறர் நோய்க்கு மருத்துவம் கூறும் இவர், தன் வியாதி தன்னை அழிக்கும் என்பதை ஏன் அறியவில்லை? தெளிந்த நீர் நிறைந்த குளத்தங்கரையில் இருந்து கொண்டு தாகத்தினால் இறப்பவர் போன்றவரே இவர்.

இவரைப் போன்ற மடையர் வேறு யாருமில்லை என்கிறார் திருவள்ளுவர். ஈருலகிலும், நன்மைகள் பெற்று, இன்புறுவது எப்படி எனக் கற்றும், அதைப் பிறருக்கு உபதேசம் செய்தும், தான் அவ்வழியில் நடவாமல், தீயொழுக்கத்தை மேற்கொண்டு, இங்கும் துன்புற்று, அடுத்த உலகிலும் துன்புறும் இவரை மடையர் என்று தானே கூற வேண்டும். இவர் நன்னெறிகளைக் கற்றறிந்திருந்த போதிலும், அவ்வறிவினால் இவருக்கு எவ்விதப் பயனுமில்லை.

கற்றும், பிறருக்கு எடுத்துக் கூறியும், தான் பெற்ற அறிவுடைமையில் தன்னை அடக்கியாளாமல், தீயொழுக்கத்தை மேற்கொள்பவனைப் போன்ற மடையன் வேறு யாருமில்லை என்கிறார் திருவள்ளுவர்.

***ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்***
***பேதையின் பேதையார் இல்.***

வாயினால் அழகாகப் பேசுபவன், தன்னைக் கவனமாய்க் காத்து, செய்கையிலும் அழகைக் காட்ட வேண்டும்; பிறருக்கு நன்னெறி உபதேசம் செய்பவன், முதலில் தான் நன்னெறி ஒழுக்கங்களில் நிலைபெற வேண்டும்; பிறருக்குத் தன்னடக்கத்தை உபதேசம் செய்பவன் முதலில் தன்னை அடக்கி ஆள வேண்டும்; என்று கூறுகின்றார் பகவான் புத்தர்.

***செய்கையில் காட்டாமல், ஒருவன் வாயால் மட்டும், மதுரமாகப் பேசுதல், அழகும், நிறமும் அமைந்த மலர் மணமற்றிருப்பது போல அவன் சொல்லும் பயனற்றதாகும்.***

***சொல்லிய வண்ணம் செயல் புரியும் ஒருவனுடைய மதுரமான பேச்சு, அழகும், நிறமும் அமைந்த மலர் மணமும் பெற்றிருப்பது போல், அவன் சொல்லும் பயனளிப்பதாகும். ஒவ்வொரு மனிதரும் தான் நன்னெறியில் நிலைபெற வேண்டும். அதன் பிறகே மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்.***

***மற்றவர்களுக்கு உபதேசிப்பதைப் போல் ஒருவன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளட்டும். தன்னை நன்கு அடக்கி ஆண்ட பிறகு, பிறரை அடக்கி ஆள முடியும். ஏனெனில், தன்னை அடக்கிக் கொள்வதே கடினமான காரியம்***.

இப்படிச் செய் என்று சொல்வது எளிது, சொல்லியபடி செய்வது அரிது, பிறருக்கு அறிவுரை கூறுகிறபடி, எவனொருவன் தான் அதில் ஒழுகுகிறானோ, அவனே, பிறருக்கு அறிவுரை கூறத் தகுதியுள்ளவன். இவனே கற்றதனால், தானும் நன்மை பெற்று, பிறருக்கும் நன்மை செய்பவன்.

அதிகம் கற்றதனால் ஒருவன் அறத்தை மதிப்பவன் ஆவதில்லை. கற்றது சிறிதளவேயாயினும், அதில் ஒழுகுபவனே அறம் காப்பவன். இவனே கற்றதனால், தானும் நன்மை பெற்று, பிறருக்கும் நன்மை செய்பவன்.

அதிகம் பேசுவதால், ஒருவன் அறத்தை மதிப்பவன் ஆவதில்லை. கிடு கிடுவென இடி இடித்தாலும், அது வெறும் ஓசைதான். நன்னெறி ஒழுக்க மில்லாதவன் அறத்தை அதிகம் பேசுவதும் இது போல்தான்.

எவனொருவன் தான் கற்ற நன்னெறியில் ஒழுகுகிறானோ, அவனே அறத்தை ஆதரிப்பவன் என்று பகவான் புத்தர் உரைத்திருக்கின்றார்.

***அதிகமாகப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறத்தை ஆதரிப்பவன் ஆகிவிட மாட்டான். அறவிதிகளைச் சிறிதளவே அறிந்தவனாயினும், அறத்தை மனதால் உணர்ந்து, தன் வாழ்வில் தருமம் தவறாமல் நடந்தால், அவனே அறத்தை ஆதரிப்பவன்.***

***பொறாமையும் பேராசையும், தீயொழுக்கமும் உள்ளவன், பேச்சாலோ, உடல் அழகாலோ, மட்டும் நல்லவனாகிவிட மாட்டான். எவன் இவற்றை எல்லாம் அழித்துவிட்டானோ, வேரோடு பறித்து எறிந்துவிட்டானோ, எவன் குற்றமற்ற மேதாவியோ, அவனே உண்மையான அழகுடையவன்.***

ஆகவே, நன்னெறிகளைக் கற்று, பிறருக்கு உபதேசம் செய்பவன், அதற்கு ஒப்ப, தானும் நன்னெறி ஒழுக்கங்களில் நிலபெற வேண்டும்.

## பிறர் குற்றம் காண்பதுபோல் தன் குற்றம் காண்பவன் குற்றங்களிலிருந்து விடுபடுவான்

பிறர் குற்றம் காண்பது எளிது; தன் குற்றம் காண்பது அரிது. பிறர் குறைகளிலேயே நாட்டமுள்ளவன், எப்போதும் புறங்கூறிக் கொண்டேயிருப்பவன், தன் குற்றங்களை வளர விடுகிறான். தன் குற்றங்களைத் தேடுபவன், தன்னையே கவனமாய்க் காத்து வருபவன், குற்றங்களிலிருந்து விடுபடுகிறான். பிறர் குற்றங்களைத் தேடுவது போல், எவனொருவன் தன் குற்றங்களைத் தேடி, அக்குற்றங்களை விட்டு விடுகிறானோ, அவனே, பெரியோர் கூறிய நன்னெறிகளை அடைவான். பெரியோர் கூறிய நன்னெறிகளை அடைந்தவன், நல்வழியில் நடப்பான். நல்வழியில் நடப்பவன், ஒழுக்க முடைய வனாவான். ஆகவே, பிறர் குற்றம் காண்பது போல், தன் குற்றம் காண்பவன், குற்றங்களிலிருந்து விடுபட்டு, ஒழுக்க முடையவனாவான்.

தன் நலனை விரும்புபவன், ஈருலகிலும் இன்புற விரும்புகிறவன், தன்னையே கவனமாய்க் காத்து வர வேண்டும். எவ்வாறு கண்ணாடியில் முகத்தைப் பார்த்து, முகத்தில் இருக்கும் அழுக்கை போக்குகிறோமோ அதுபோல் நாம் நம் குறைகளைத் தேடி, அக்குறைகளை ஒவ்வொன்றாகப் போக்க வேண்டும். எவரொருவர் இதைச் செய்கின்றாரோ, அவரே எல்லாக் குற்றங்களிலிருந்தும் விடுபடுவார். அவரே எண்ணத் தூய்மை, சொல்தூய்மை, செயல் தூய்மை பெற்று, நன்னெறி ஒழுக்கத்தில் நிற்பார். இதுவே ஒழுக்க முடைமையாகும்.

குறையே இல்லாத மனிதன் என்று எவனும் இல்லை. குற்றங்கள் தானாகவே மனிதனை விட்டு விலகுவதுமில்லை. நன்னெறிகளைக் கல்வி கேள்வியால் கற்றால் ஒழிய , நன்மை தீமைகளை எவனும் அறிவதில்லை. நன்னெறிகளைக் கற்று, நன்மை தீமைகளை அறியும் ஆற்றல் பெற்றவனும், தன் குற்றங்களைத் தேடாதவரை, தன் குற்றங்களைக் காண்பதில்லை. தன் குற்றங்களைக் காண்பவனும், பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாதவரை, தன் குற்றங்களை விடுவதில்லை. ஆகவே ஈருலகிலும் நன்மை பெற விரும்புகிறவன், நன்னெறிகளைக் கற்று, தன் குறைகளைத் தேடி, பழிக்கும், பாவத்திற்கும் அஞ்சி, தன் குற்றங்களை விட்டுவிட வேண்டும். முன்னர் தான் அறியாமையால் செய்த பிழைகளை, இனிமேலும் செய்யாமல், தன்னையே கவனமாய்க் காத்து வர வேண்டும். குற்றங்கள் செய்யாமல் வாழ்வதே ஒழுக்க முடைமையாகும்.

பிறர் குறை காண்பதைப் பற்றி திருவள்ளுவர் இவ்வாறு உரைத்திருக்கின்றார்:

***ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்***
***தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.***

பிறருடைய குற்றத்தைக் காண்பது போலவும், தூற்றுவது போலவும், ஒருவர் தன் குற்றத்தைக் கண்டு, தன்னைத் தானே தூற்றி வெட்குவாரானால், அவர் இனி குற்றம் செய்ய மாட்டார். இவ்வுலக வாழ்விலும், அடுத்த உலகிலும் அவருக்கு ஏது இனி துன்பம்.

குளம், தன் கரையில் நிற்கும் மரத்தின் உயரத்தை, தன் நீரில் பிரதிபலித்துக் காட்டும். ஆனால் தன் ஆழத்தை அது காட்டுவதில்லை. இவ்வகையான மக்களும் உலகில் உள்ளனர். இவர்கள் தம் குறைகளை மிகத் திறமையாக மறைத்தும், பிறர் குற்றங்களைத் தேடியும், பிறரைப் பழித்தும் பேசுவார்கள். இது கீழ் மக்களுக்கே உரிய குணமாகும்.

இவர்கள் தம் குற்றங்களை மறைக்க எண்ணி, மேலும், மேலும் குற்றங்கள் செய்து, பாவத்தினால் நிரம்பி விடுவார்கள். எவனொருவன், தன் குற்றங்களுக்காக நாணாமல், பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல், தன் குற்றங்களை மறைக்கின்றானோ, அவன், தன் குற்றங்களை மறைப்பதற்காக மேலும் மேலும் குற்றங்கள் செய்து, அக்குற்றங்களாலேயே அழிவான்.

ஒரு பகைவனைப் போல், குற்றங்கள் ஒருவனை அழிக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

***குற்றமே காக்க பொருளாகக் குற்றமே***
***அற்றம் தரூஉம் பகை.***

குற்றம் இருந்தால் அழிவு ஏற்படுவது திண்ணம். ஒரு பகைவனைப் போல், குற்றங்கள் ஒருவனை அழிக்கும். அழிவற்ற வாழ்க்கை வாழ வேண்டுவோர், தம்மிடமுள்ள குற்றங் குறைகளை நீக்க வேண்டும். ஆகவே குற்றங்களை, வாழ்வை அழிக்கும் பகைவனைப் போல் கருதி, குற்றம் ஏதும் செய்யாமல், நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

***பகவான் புத்தரும், "ஏ மானிடனே! இதை அறிந்துகொள். பாவத்தை மறைக்க முடியாது. பேராசையும், தீயொழுக்கமும் உன்னைத் தீராத துக்கத்தில் அழுத்தாமலிருக்கட்டும்" என்று கூறியுள்ளார்.***

ஆகவே, திருவள்ளுவரும், பகவான் புத்தரும் கூறுவது போல், நாம் பிறர் குற்றத்தைக் காண்பது போலவும், பிறரைத் தூற்றுவது போலவும், நம் குற்றங்களைக் கண்டு, நம்மை நாமே தூற்றி, வெட்கமுற்று, பழிக்கும், பாவத்திற்கும் அஞ்சி, குற்றங்களை விட்டுவிட வேண்டும். இவ்வாறு செய்தோமென்றால், நாம் நன்னெறியில் ஒழுகி
ஈருலகிலும் இன்புறலாம்.

# கல்விக்கு அழகு தருவது ஒழுக்கம்

ஒழுக்கம் தவறாமல் வாழ்பவன், உலகோருக்கு இனியவன். கல்வி கற்றவனும், பெருமையும், புகழும் அடைவது, ஒழுக்கத்தினால் அன்றி, கல்வியறிவால் மட்டுமல்ல. ஒழுக்கம் தவறினால், கல்வி கற்றவனும், பெருமையையும், புகழையும் இழந்து, தாழ்ந்த நிலையை அடைவான். ஆகவே, கல்வி கற்றவனும், தன் கல்விக்கும், புகழுக்கும் பங்கம் ஏற்படாமல், நன்னெறி ஒழுக்கத்தில், தன்னைக் கவனமாய்க் காத்து வர வேண்டும்.

கல்லாத ஒருவன் நன்னெறி ஒழுக்கமில்லாமல், தகாத செயல்களைச் செய்தானென்றால், "கல்லாத மடையன்" என உலகம் அவனைத் தூற்றும். கல்வி கற்றவன் ஒழுக்கம் தவறினால், "கற்றும் மடையன்," என உலகம் அவனையும் தூற்றும். ஆகவே, கல்வி ஒருவனைப் பழியிலிருந்தும், நிந்தனையிலிருந்தும் காப்பதில்லை. நன்னெறி ஒழுக்கம் ஒன்றே, ஒருவனுக்குப் பழியும், நிந்தனையும் ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்கும். கல்வி கற்றவன், ஒழுக்கம் தவறி, தகாத செயல்களைச் செய்து, "கற்றும் மடையன்" எனத் தூற்றப்பட்டால், இவன் கற்றும் என்ன பயன்?

கல்வி அறிவு பெற்ற ஒருவன், பக்தி இல்லாமல், ஒழுக்கமில்லாமல், மனதாலும், சொல்லாலும், உடலாலும் குற்றங்கள் செய்து, இவ்வுலக வாழ்விலும் தூற்றப்பட்டு, துன்புற்று, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் துன்புறுவானாயின், அவன் கற்றும் என்ன பயன் என்கிறார் திருவள்ளுவர்.

***கற்றதனால் ஆய பயன்என் கொள் வாலறிவன்***
***நற்றாள் தொழார் எனின்.***

அதாவது, கல்வி அறிவு பெற்ற ஒருவன், உள்ளத்தில் பக்தி கொண்டு, இறைவனை வணங்கி, நன்னெறியில் ஒழுகி, தூய்மையான வாழ்வு வாழாவிட்டால், அவன் கற்றும் என்ன பயன்?

ஆகவே, கல்வி கற்றவன், தான் கற்ற கல்விக்குப் பெருமை உண்டாகுமாறு, நாவைக் காத்து, மனதை அடக்கி, உடலால் தீமை எதையும் செய்யாது, நற்பண்புகளாலும், நல்லொழுக்கத்தாலும், தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். தீயொழுக்கம் உள்ளவன், தன் கல்வியாலோ, பேச்சாலோ, அல்லது உடல் அழகாலோ மட்டும் நல்லவனாகிவிட மாட்டான். ஒருவன் நல்லவனாவதும், தீயவனாவதும், அவனுடைய ஒழுக்கத்தாலேயே. எப்படி உடலை ஆபரணங்களால் அழகு படுத்துகிறோமோ, அதுபோல் கல்வி கற்றவன், நற்பண்புகளாலும், நல்லொழுக்கத்தாலும், தன்னை அழகு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி கற்று பொறுப்பான பதவிகளில் இருக்கும் பலர், ஒழுக்கம் தவறி, தகாத செயல்கள் செய்வதை, நாம் காண்கிறோம். ஆசிரியர்களும், வைத்தியர்களும், வழக்கறிஞர்களும், வியாபாரிகளும், நிர்வாகிகளும், மற்றும் கல்வி கற்று பொறுப்பான பதவிகளில் உள்ளோரும் ஒழுக்கம் தவறியதால், உயர்ந்த நிலையிலிருந்து, தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்படுவதைக் காண்கிறோம். கல்வியும், பதவியும் இவர்களை நிந்தனையிலிருந்து காப்பதில்லை. இவர்கள் அடைந்த நிந்தனை இவர்கள் ஒழுக்கம் தவறியதால் ஏற்பட்டதேயன்றி வேறில்லை.

ஆகவே, உயர்ந்த நிலையில் உள்ளோர், தம் நிலைக்கும், கல்விக்கும் ஒப்ப, நீதி நெறி தவறாமல், கடமைகளிலே கவனமுள்ளவர்களாகவும், நாவைக் காத்து, மனதை அடக்கி, தம் பொறுப்பை உணர்ந்து, எப்போதும் கவனமாய் இருந்து, செய்யத் தகாதவைகளை விலக்கி, செய்யத் தக்கவைகளையே செய்து, நல்லொழுக்கத்தால் தம் பெருமையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு, ஆசிரியர் உத்தியோகத்தை எடுத்துக் கொள்வோம். ஆசிரியரின் கல்வியையும், உத்தியோகத்தையும் மதித்து, தம் பிள்ளைகளுக்கு நன்மை செய்வார் என்று நம்பி, பெற்றோர் தம் பிள்ளைகளை, அவரிடம் கல்வி கற்க அனுப்புவார்கள். ஆசிரியர்களில் சிலர், தம் கடமையில் கவனமில்லாமல், தம் பொறுப்பிற்கு ஏற்ப ஒழுக்க விதிகளில் தன்னை கவனமாய்க் காக்காமல், ஒழுக்கம் தவறி, தன்னை நம்பிய மாணவர்களுக்கும், பெற்றோருக்கும், தீங்கு செய்வதைக் காண்கிறோம். ஒழுக்கம் தவறியதால், இவர்கள் தூற்றப்பட்டு, தண்டிக்கப்பட்டு, உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்குப் போவதையும் காண்கிறோம். இவர்களுக்கு ஏற்பட்ட இழிவு, ஒழுக்கம் தவறியதாலேயே அன்றி வேறில்லை. கல்வியும், உத்தியோகமும், இவர்களை நிந்தனையிலிருந்து காப்பதில்லை.

ஆனால், தம் கடமையில் கவனமாய் இருந்து, தம் பொறுப்புக்கு ஏற்ற ஒழுக்க விதிகளில் தம்மைக் கவனமாய்க் காத்து, மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும், நன்மைகள் செய்யும் ஆசிரியர்களையும் காண்கிறோம். இவர்கள் மாணவர்களாலும், பெற்றோர்களாலும், போற்றப்பட்டு, பெருமையும், புகழும் அடைவதையும் காண்கிறோம். இவர்கள் பெற்ற பெருமையும் புகழும், இவர்களுடைய நல்லொழுக்கத்தாலேயே அன்றி வேறில்லை.

மருத்துவத் தொழிலை எடுத்துக் கொள்வோம். சில வைத்தியர்கள், ஒழுக்கம் தவறி, தங்களிடம் மருத்துவம் பெறும் நோயாளிகளுக்குத் தீங்கு செய்வதைக் காண்கிறோம். கல்வி கற்று, மக்களால் மதிப்பும், மரியாதையும் கொடுக்கும் உத்தியோகம் செய்யும் இவர்கள், தங்களிடம் நம்பி வந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தீமை செய்வதால் தூற்றப்பட்டு, தண்டிக்கப்படுவதையும் காண்கிறோம். இவர்கள் பெருமையையும், புகழையும்

இழந்து, உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்குப் போவது தீயொழுக்கத்தால் அன்றி வேறில்லை. கல்வியும், உத்தியோகமும் இவர்களை நிந்தனையிலிருந்து காப்பதில்லை.

ஆனால், கடமையில் கவனமாயிருந்து, தன் உத்தியோகத்திற்கும், பொறுப்பிற்கும், ஏற்ற ஒழுக்க விதிகளில் தன்னைக் கவனமாய்க் காத்து, சேவை செய்து, புகழும், பெருமையும் அடையும் மருத்துவர்களையும் காண்கிறோம். இவர்கள் பெற்ற பெருமையும், புகழும் நல்லொழுக்கத்தாலேயே அன்றி வேறில்லை.

ஆகவே, கல்விக்கு அழகு தருவது ஒழுக்கம். கல்வி அறிவைப் பெற்றவர் நன்னெறிகளைக் கற்று, நன்மை தீமை அறிந்து, தான் கற்ற கல்விக்கு பெருமை தருமாறு, நன்னெறியில் ஒழுக வேண்டும். கற்றவரிடம் தன்னடக்கமும், நன்னெறி ஒழுக்கமும் இல்லாவிட்டால், கற்றதனால் என்ன பயன்?

மனதை அடக்கி ஆளாதவன், அறத்தின் சிறப்பை அறியாதவன், நன்னெறி ஒழுக்கம் இல்லாதவன், கற்றும் என்ன பயன்? நாண வேண்டிய கருமங்களுக்கு நாணாமல், அஞ்ச வேண்டிய கருமங்களுக்கு அஞ்சாமல், தகாத கருமங்களைச் செய்பவன் கற்றும் என்ன பயன்?

இவன் கற்றது பெயருக்கே! சிறுமையும், செருக்கும் இவனை ஆளும். கற்றுவிட்டோம் என்று செருக்கித் திரியும் இவனுக்கு, ஈருலகிலும், பெருமையுமில்லை, புகழுமில்லை.

ஆகவே, கற்றோர் தம் கல்விக்கு ஏற்ப நீதி நெறி தவறாமல், கடமைகளிலே கவனமுள்ளவர்களாகவும், நாவைக் காத்து, மனதை அடக்கி, தம் பொறுப்பை உணர்ந்து, எப்போதும் கவனமாயிருந்து, செய்யத் தகாதவைகளை விலக்கி, செய்யத் தக்கவைகளையே செய்து, நல்லொழுக்கத்தால் தம் பெருமையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

# நல்லொழுக்கம் ஈருலகிலும் பெருமை தரும்

ஒருமுறை பகவான் புத்தர், சிஷ்யர் ஆனந்தாவுக்கு இவ்வாறு ஒரு உபதேசம் செய்தார்.

**பகவான் புத்தர்:** ஆனந்தா! எண்ணங்களாலும், சொல்லாலும், செயலாலும் பாவச் செயல்களைச் செய்யக் கூடாதென்று நான் விளக்கித் தெளிவுபடுத்திப் பிரகடனம் செய்துள்ளேன்.

**ஆனந்தர்:** பகவான்! தாங்கள், விளக்கி, தெளிவுபடுத்தி, பிரகடனம் செய்துள்ள செய்யக்கூடாத, செய்யத்தகாத செயல்களைச் செய்வதால் ஏற்படும் இழப்பு என்ன?

**பகவான் புத்தர்:** நான் இவ்வாறு பிரகடனம் செய்துள்ளதால், செய்யத் தகாத செயல்களைச் செய்வோருக்கு, இவ்வகையான இழப்புகள் வரும் என எதிர் பார்க்கலாம்:

அவர் பாவச் செயல்களைச் செய்வதால், அவர் மனச்சாட்சி அவரை உறுத்தும். அவருடைய குற்றச் செயல்களைக் கண்டு, அறிவுடையோர் அவரைப் பழித்துப் பேசுவார்கள். மக்களிடையே அவரைப் பற்றிய தீய வதந்தி பரவும். மரணம் வரும்போது, உள்ளம் நடுங்கி, மனக்குழப்பத்தோடு இறப்பார்.

உடலை விட்டு உயிர் பிரிந்த பின் நரகத்திலோ, அல்லது மற்றத் துன்பப்பிறப்பிலோ பிறந்து துன்பப்படுவார்.

ஆனந்தா! சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் பாவச் செயல்களைச் செய்வோருக்கு, மேற்கூறப்பட்ட துன்பங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கலாம். ஆனால், ஆனந்தா! சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் நன்னெறியில் ஒழுக வேண்டுமென்று நான் விளக்கி, தெளிவுபடுத்திப் பிரகடனம் செய்துள்ளேன்.

**ஆனந்தார்:** பகவான்! தாங்கள் விளக்கி, தெளிவுபடுத்தி, பிரகடனம் செய்துள்ளதால், செய்யவேண்டிய, செய்யத் தக்க செயல்களைச் செய்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

**பகவான் புத்தர்:** ஆனந்தா! நான் இவ்வாறு பிரகடனம் செய்துள்ளதால், செய்யத் தக்க செயல்களைச் செய்வோருக்கு, இவ்வகையான நன்மைகள் வருமென எதிர் பார்க்கலாம்:

அவர் நன்னெறியில் ஒழுகுவதால் அவரை மனச்சாட்சி உறுத்தாது.

அவருடைய நன்னெறி ஒழுக்கத்தைக் கண்டு, அறிவுடையோர் அவரைப் புகழ்வார்கள்.

மக்களிடையே அவரைப் பற்றிய நற்புகழ் பரவும்.

மரணம் வரும்போது, அச்சமோ, மனக்குழப்பமோ இன்றி, அமைதியாக உயிர் பிரியும்.

உடலை விட்ட உயிர் பிரிந்த பின், தெய்வலோகத்தில் பிறந்து இன்புறுவார்.

ஆனந்தா! சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் நன்னெறியில் ஒழுகுவோருக்கு, மேற்கூறப்பட்ட நன்மைகள் வருமென எதிர் பார்க்கலாம்.

ஆகவே, பாவங்களை விட்டுவிடுங்கள். இதனைச் செய்ய முடியும். பாவங்களை விட முடியாதென்றால் "பாவங்களை விட்டு விடுங்கள்" என்று நான் கட்டளையிட மாட்டேன். பாவங்களை விட்டுவிட முடியுமாதலால், "பாவங்களை விட்டு விடுங்கள்" என்று நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.

பாவங்களை விட்டுவிடுவதால், இழப்பும், துன்பமும் வருமென்றால் “பாவங்களை விட்டுவிடுங்கள்" என்று நான் கூறமாட்டேன் பாவங்களை விட்டுவிடுவதால், இலாபமும், இன்பமும் வருமாதலால் “பாவங்களை விட்டுவிடுங்கள்" என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

நன்னெறியில் ஒழுகுங்கள். இதனைச் செய்ய முடியும். நன்னெறியில் ஒழுக முடியாதென்றால், "நன்னெறியில் ஒழுகுங்கள்" என்று நான் கட்டளையிட மாட்டேன். நன்னெறியில் ஒழுக முடியுமாதலால், "நன்னெறியில் ஒழுகுங்கள்" என்று நான் கட்டளையிடுகிறேன்.

நன்னெறியில் ஒழுகுவதால், இழப்பும், துன்பமும் வருமென்றால், "நன்னெறியில் ஒழுகுங்கள்" என்று நான் கூற மாட்டேன். நன்னெறியில் ஒழுகுவதால், இலாபமும், இன்பமும் வருமாகையால், "நன்னெறியில் ஒழுகுங்கள்" என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

நல்லொழுக்கம் ஈருலகிலும், நன்மை தரும் என்றும், தீயொழுக்கம் ஈருலகிலும் துன்பம் தரும் என்றும், திருவள்ளுவர் கூறுகிறார்.

***நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்***
***என்றும் இடும்பை தரும்.***

நல்லொழுக்கம் தூய்மையான வாழ்வுக்குக் காரணமாகையால், நல்லொழுக்கம் இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் இன்பம் தரும். தீயொழுக்கம் பாவம் செய்தலுக்குக் காரணமாகையால், தீயொழுக்கம் இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் துன்பத்தையே தரும்.

பகவான் புத்தர் இவ்வாறும் கூறியுள்ளார்:

***விழித்தெழுக! கருத்தில்லாமல் இருக்க வேண்டாம். நன்னெறி ஒழுக்கத்தைக் கடைப்பிடி. நன்னெறியில் நடப்பவனுக்கு இங்கும் சுகம், அடுத்த உலகிலும் சுகம்.***

***நன்னெறி ஒழுக்கத்தில் நடப்பாயாக, தீயொழுக்கத்தில் செல்ல வேண்டாம். நன்னெறியில் நடப்பவனுக்கு, இங்கும் சுகம், அடுத்த உலகிலும் சுகம்.***

***தீயொழுக்கத்துடன் அடக்கமில்லாமல் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதைக் காட்டிலும், நல்லொழுக்கத்துடன் தியானம் செய்து வரும் ஒருவன் ஒரு நாள் வாழ்வதே மேலானது.***

***அறியாமையுடன் அடக்கமில்லாமல், நூறு வருடம் வாழ்வதைக் காட்டிலும், ஞானத்தோடு தியானம் புரிந்துவரும் ஒருவன் ஒரு நாள் வாழ்வதே மேல்.***

***ஒருவன் சோம்பலுடன் பலவீனமாக நூறு வருடம் வாழ்வதைக் காட்டிலும், வீரியத்துடன் முயற்சி செய்து ஒரு நாள் வாழ்வதே மேலானது.***

***இந்த உலகில் தாயைப் போற்றுதல் இனிது; தந்தையைப் போற்றுதல் இனிது; துறவியைப் பேற்றுதல் இனிது; இனிதே! மெய்ஞ்ஞானியைப் போற்றுதல்.***

***வயோதிகம் வரை நல்லொழுக்கம் நிலைத்திருத்தல் இனிது; அறத்தில் உறுதியான நம்பிக்கை இனிது; இனதே! பாவங்களை விலக்கல்.***

***ஏ, மானிடனே! இதை அறிந்துகொள். பாவத்தை எளிதில் அடக்க முடியாது. பேராசையும், தீயொழுக்கமும், உன்னைத் தீராத துக்கத்தில் அழுத்தாமலிருக்கட்டும்.***

## ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
## உயிரினும் ஓம்பப் படும்.

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்